(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

Hindu Temples

* 226 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there are proposals under the consideration of the Government to throw open the Hindu temples to communities other than Hindus?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஆம். தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு ஆலய நுழைவு அமைதிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளைச் சேர்ந்த விதி 3 ( ), இந்துக்களல்லாதவர்கள் இந்து கோயில்களில் உட்புறத்திலோ அல்லது அவற்றிற்கு வெளியிலோ அமைந்துள்ள ஓர் இடத்திற்குச் செல்வதற்கும், அல்லது இறைவழிபாடு செய்வதற்கும் தடை விதிக்கின்றது. தமிழ்நாடு அரசு இப்போது இவ்விதியை நீக்கி ஆணைகள் பிறப்பித்துள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இந்து மதத்தின் புனிதமான தன்மையில் நம்பிக்கை கொண்டு ஆலயங்கள் எவ்வாறு நடத்தப்படவேண்டும், அங்கு எவ்வாறு ஆராதிக்கப்படவேண்டும் என்பவை போன்ற விதிகளை நன்கு அறிந்து அதில் நம்பிக்கை கொண்டுள்ளவர்களுக்குத் தரிசனம் செய்வதற்கு அனுமதி கொடுக்கலாம் தீண்டாமையை ஒழிக்கக்கூடிய காலத்தில் என் மாதிரிப்பட்டவர்கள் ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் அளிப்பதுதான் உண்மையான இந்துமதம் என்பதை ஒப்புக்கொண்டோம். ஆலயங்களுக்கு எந்த மதஸ்தர்கள் வந்தாலும்சரி, இந்த விதிகளை நன்கு அறிந்து அதற்கு மரியாதை செய்து ஒரு கட்டுப்பாடோடு நடந்து கொள்வார்கள் என்றால் எந்த மதஸ்தர்களுக்கும் தரிசனம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்து மதத்தின் புனிதத்தன்மை காப்பாற்றப்படவேண்டுமென்று சொன்னார்கள். எம்மதமும் சம்மதம்தான் என்பதுதான் ஒவ்வொரு மதத்தின் புனிதத்தன்மையாக இருக்கவேண்டும் என்பது இந்த அரசின் கருத்தாகும்.